| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை - 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 016584 /டி/2022** **நாள் : 27.09.2022**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம் - சென்னை - 6 - தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு (ESLC)– அக்டோபர் 2022 - தேர்வுக் கூட அனுமதி சீட்டு பதிவிறக்கம் செய்தல் குறித்த பத்திரிக்கைச் செய்தி – வெளியிடுதல் – குறித்து.

******

10.10.2022 முதல் 14.10.2022 வரை நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு (ESLC) விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் தங்கள் தேர்வுக் கூட அனுமதிச் சீட்டை பதிவிறக்கம் செய்தல் சார்ந்த விவரங்களை தனித்தேர்வர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தியினை தங்களது பத்திரிகையில்/ வானொலியில்/ தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடுமாறும், ஒலி/ஒளி பரப்பிடுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

“இது விளம்பரம் அல்ல” எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/–**

**இயக்குநர்**

**இணைப்பு:**பத்திரிகைச் செய்தி

**நகல் :**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் } தகவலுக்காகவும் உரிய
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் } நடவடிக்கைக்காகவும்
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் அனுப்பப்படுகிறது.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6**

**தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு - அக்டோபர் 2022**

**தேர்வுக் கூட அனுமதிச்சீட்டுகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்தல்**

**செய்திக்குறிப்பு**

10.10.2022 முதல் 14.10.2022 வரை நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுத தேர்வுத் துறையின் சேவை மையங்களில் (Service Centre) ஆன் - லைன் மூலமாக விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் 29 .09.2022 ( **வியாழக்கிழமை) நண்பகல் 12.00 மணி முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**பதிவிறக்கம் செய்யும் முறை**

மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் HALL TICKET-என்ற வாசகத்தை CLICK செய்தால் "ESLC OCTOBER 2022 EXAMINATION - CANDIDATE HALL TICKET DOWNLOAD" என்ற தலைப்பின்கீழ் உள்ள DOWNLOAD என்று வாசகத்தினை CLICK செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது விண்ணப்ப எண் (Application Number) மற்றும் பிறந்த தேதியை (Date of birth) பதிவு செய்தால் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு திரையில் தோன்றும். அதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

உரிய தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்காண் தேர்விற்கு விண்ணப்பித்த தனித்தேர்வர்களுக்கு தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு குறித்து தனிப்பட்ட முறையில் அறிவிப்பு ஏதும் அனுப்ப இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/–**

**இயக்குநர்**

**இடம்: சென்னை-6.**

**நாள்:** 27.09.2022